RESEARCH ARTICLE

DOI: 10.34256/irjt22413

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# பாரதியார் கவிதைகளில் காதல்

ஆ. சிவனருட்செல்வி [அ, *]

[அ] தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி-642001, தமிழ்நாடு, இந்தியா

# Love in the Poems of Bharathiyar

A. Sivanarutselvi [a, *]

[a] Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi–642001, Tamil Nadu, India

* Corresponding Author: Sivanarutselvi@gmail.com

Received: 20-08-2021
Revised: 03-08-2022
Accepted: 07-08-2022
Published: 10-09-2022

Check for updates

**ABSTRACT**

Bharathiyar is one of the foremost poets who glorified love. Among many poets, only the poems of a few people are close to us. Bharathiyar is the closest person among us in this way. Bharathi viewed love not as an individual experience but as an experience appropriate to women's liberation and superstition and the creation of woman's knowledge. Bharathi's poems of love for society are full of prosperity, awakening, revolution, and anger. Among the poets who wrote poetry for love, it can be said that Bharathi was the one who fell in love with poetry. The world runs on love. Love has no death. Bharathi adopted Shelley's comment that "If there is no love, there is no life" as a mantra. When life appeared in the world, love also appeared. As long as there is life in the world, so will love. Love is based on the mind and not on the body and knowledge. Love dispels anxiety and belies death. He who cannot feel love cannot appreciate poetry or art. Success in life can only be achieved by surrendering to each other in love. It turns out that love can break through barriers as well as reach immortality through love.

**Keywords:** Bharathiyar Poems, Love, Bharathiyar View, Liberation

## முன்னுரை

காதலைப் போற்றும் கவிஞர்களுள் முக்கிய இடம் பிடித்தவர் பாரதி. உனக்குப் பிடித்த கவிஞர் யார் என்றதும் உடனே நம் நினைவில் வருவது மீசைக்காரன், கோபக்காரன், புரட்சிக்காரன், முண்டாசுக்காரன், சிவப்பு பொட்டுக்குச் சொந்தக்காரன் பாரதியைத் தான் கூறுவோம். பல கவிஞர்களின் மத்தியில் ஒருசிலரின் கவிதைகள் மட்டுமே நம்மிடம் நெருக்கத்தை ஏற்படுத்தும். அவ்வகையில் நம்மோடு நெருக்கமானவராக இருப்பவர் பாரதியார். காதலைத் தனிமனிதனின் அனுபவமாகப் பார்க்காமல் பெண்களின் விடுதலைக்கும், மூட நம்பிக்கைக்கு எதிராகவும் பெண் அறிவின் ஆக்கத்திற்கும் உரிய அனுபவமாகப் பார்த்தவர் பாரதி. சமூகத்தின் மேல் காதல் கொண்ட பாரதியின் கவிதைகளின் செழிப்பும், எழுச்சியும், விழிப்பும், புரட்சியும், கோபமும் நிறைந்து காணப்படுகிறது. காதலுக்குக் கவிதை எழுதும் கவிஞர்கள் மத்தியில் கவிதைக்காகவே காதலித்தவர் பாரதி என்று கூறலாம்.

இயற்கைக்கு அடுத்த நிலை காதலை வைத்தவன் தமிழன் என்று கூறலாம். காதலைப் பாடுவதில் பல்வேறு நிலைகள் உண்டு. காதல் பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியங்களில் அதிகமாகக் காணலாம். காதல் என்கின்ற சொல் தொடக்கக் காலம் முதல் இன்றுவரை ஒருவித உயரிய உணர்வைச் சுட்டுகிறது.



Scanned by CamScanner